செ.வெ.எண்: 108/2017 நாள்: 10.02.2017

# பத்திரிக்கைசெய்தி

பொது விநியோகத்திட்ட செயல்பாட்டில் காணப்படும் குறைபாடுகளை களைவதற்கும், மக்களின் குறைகளை கேட்டு உடனுக்குடன் அவற்றை நிவர்த்தி செய்வதற்கும், சிறப்பு முகாம்கள் 11.02.2017 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நான்கு வட்டங்களில் கீழ்கண்டவாறு நடைபெற உள்ளது.

அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் அழகப்பபுரம் பகுதிக்கு அழகப்பபுரம் பேரூராட்சி அலுவலகத்திலும், தோவாளை வட்டத்தில் அருமநல்லூர் பகுதிக்கு அருமநல்லூர் ஊராட்சி அலுவலகத்திலும், கல்குளம் வட்டத்தில் குருந்தன்கோடு பகுதிக்கு குருந்தன்கோடு ஊராட்சி அலுவலகத்திலும், விளவங்கோடு வட்டத்திற்கு மெதுகும்மல் பகுதிக்கு மெதுகும்மல் ஊராட்சி அலுவலகத்திலும் வட்ட வழங்கல் அலுவலர் தலைமையில் மக்கள் குறைதீர் முகாம் 11.02.2017அன்று காலை 10.00 மணிமுதல் மதியம் 1.00 மணிவரை நடைபெறவுள்ளது.

மேற்படி ஊராட்சி, பேரூராட்சி பகுதிக்குட்பட்ட பொதுமக்கள் பொது விநியோகத் திட்ட செயல்பாட்டில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும், குடும்ப அட்டையில் பெயர் நீக்கல், சேர்த்தல், பெயர் திருத்தங்கள், முகவரி மாற்றம் மற்றும் குடும்ப அட்டையில் திருத்தம் செய்வதற்கும் மனுக்களை பொதுமக்கள் அளித்து தீர்வு காணலாம் எனவும் கன்னியாகுமரி மாவட்டஆட்சித்தலைவர் தெரிவித்துக்கொள்கிறார்.

ஒம்/- சஜ்ஜன்சிங் ரா சவான்
மாவட்டஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரிமாவட்டம்.
(இ) நாகர்கோவில்.

/உண்மைநகல் ஆணைப்படி/

மாவட்டஆட்சித்தலைவருக்காக

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.